செய்தி வெளியீடு எண்:234 நாள்: 7.5.2009

# பத்திரிக்கை செய்தி

மெக்ஸிகோ, அமெரிக்கா, கனடா, நியுசிலாந்து, ஸ்பெயின், பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து ஆகிய மேலை நாடுகளில் இதுவரை சுமார் 1200 நபர்களுக்கு பன்றி காய்ச்சல் (ஸ்வைன் ஃப்ளூ) தாக்கி உள்ளது. இதில் சுமார் 86 நபர்கள் இறந்துள்ளதாக செய்திகள் வந்துள்ளது. இந்தியாவில் இதுவரை இந்த நோய் எவரையும் தாக்கியதாக அறிக்கை ஏதும் இல்லை.

தமிழ்நாட்டில் இந்த நோய் வராமல் தடுக்க எல்லா முன் எச்சரிக்கை நடவடிக்கைகளையும் தமிழக அரசு எடுத்துள்ளது. விமான நிலையம் மற்றும் துறைமுகங்களின் வழியாக அயல் நாடுகளிலிருந்து வரும் பயணிகளை பரிசோதிக்க விமான நிலையங்கள் மற்றும் துறைமுகத்தில் மருந்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரை சென்னை விமான நிலையத்தில் 221 விமானங்களில் வந்த 28,991 பயணிகளையும், கோயம்புத்தூர் விமான நிலையத்தில் 26 விமானங்களில் வந்த 516 பயணிகளையும், திருச்சி விமான நிலையத்தில் 36 விமானங்களில் வந்த 3898 பயணிகளையும், சென்னை துறைமுகத்தில் 484 பயணிகளையும், தூத்துக்குடி துறைமுகத்தில் 404 பயணிகளையும் மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. 34,293 பயணிகளை சோதித்ததில் எவருக்கும் ஸ்வைன் ஃப்ளூ காய்ச்சல் இல்லை.

தமிழகத்தில் எவருக்கேனும் ஸ்வைன் ஃப்ளூ காய்ச்சல் இருப்பது உறுதி செய்யப்பட்டால், அந்த நபருக்கு வழங்க டாமி ஃப்ளூ (கூயஅடைகடர) மாத்திரைகளும், நோய் தடுப்பு கவச உடைகளும் போதிய அளவு இருப்பில் உள்ளன. இந்நோயின் தாக்கம் உள்ளவர்களுக்கு காய்ச்சல், இருமல், தும்மல், தொண்டைப்புண், பசியின்மை, உடல்வலி, தலைவலி ஆகியவை இருக்கும். ஃப்ளூ காய்ச்சல் உள்ளது என மருத்துவ பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டால்தான் டாமிஃப்ளூ மாத்திரையை உட்கொள்ள வேண்டும். மற்றவர்கள்

இந்த மாத்திரைகளை சாப்பிடக்கூடாது. அவ்வாறு சாப்பிட்டால், சிறுநீரக் கோளாறு, சிறுநீரகங்கள் பழுதுபடுதல் போன்ற சிறுநீரக நோய்கள் ஏற்படும்.

அடிக்கடி கைகளை கழுவி, சுத்தமாக பராமரித்தால் இக்காய்ச்சலை வராமல் தடுக்கலாம். கைகுட்டைகளை வைத்து இருமுதல், தும்முதல், நோயாளிகளிடமிருந்து விலகி இருத்தல், நோயாளியை தனிமைப்படுத்துதல் மற்றும் நோய் அறிகுறிகள் கண்டால் மருத்துவமனைகளுக்கு செல்லுதல், பொது சுகாதாரத் துறைக்கு தகவல் தெரிவித்தல் போன்ற விழிப்புணர்வுகளை பத்திரிக்கைகள், வானொலி மற்றும் தொலைக்காட்சிகள் மூலம் ஏற்படுத்திட பொது சுகாதாரத்துறை தக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளது. பொது சுகாதாரத் துறை இயக்குநரத்தில் 24 மணி நேரமும் 044 24321569 என்ற தொலைப்பேசி மூலம் தகவல் அறிந்துக் கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் பன்றி காய்ச்சல் ( ஸ்வைன் ஃப்ளூ) பரவாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிவக்கைகள் அனைத்தும் எடுக்கப்பட்டுள்ளன. இதுவரை தமிழ்நாட்டில் இக்காய்ச்சலால் எவரும் பாதிக்கப்படவில்லை. பொது மக்கள் எவரும் பீதி அடைய வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/—

திரு.கே.எஸ்.ஸ்ரீபதி, இ.ஆ.ப.,

தலைமைச் செயலாளர், தமிழ்நாடு அரசு.

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை , சென்னை—9.**